## தேசிய செய்திகள்

**163 ஆண்டுகள் பழமையான இந்திய தண்டனைச் சட்டத்தை மாற்றியமைக்க திட்டம்.**

- மத்திய உள்துறை அமைச்சரான **அமித் ஷா**, பழமையான மற்றும் 163 ஆண்டுகளை கடந்த **1860** ஆம் ஆண்டு இயற்றப்பட்ட **இந்திய தண்டனைச் சட்டத்திற்குப்** பதிலாக **பாரதிய நியாய சன்ஹிதா சட்டம், 2023**ஐ நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த **பாரதிய சாக்ஷ்ய மசோதா, 2023** மற்றும் **பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023** இது முறையே **1872** ஆம் ஆண்டு இயற்றப்பட்ட **இந்திய சாட்சியச் சட்டத்தையும் 1973** ஆம் ஆண்டு இயற்றப்பட்ட **குற்றவியல் நடைமுறைச் சட்டத்தையும்** திருத்துவதாக அமைகிறது.

## சர்வதேச செய்திகள்

**"இந்திய கலையின் பெருமை" பற்றிய கண்காட்சியானது டாக்காவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

- **வங்கதேசத்தில்** உள்ள இந்திய உயர் ஆணையகம் **ஆகஸ்ட் 11 அன்று** அதன் தலைநகரமான **டாக்காவில்** உள்ள **இந்திரா காந்தி கலாச்சார மையத்தில் "ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்"** என்ற மாபெரும் நிகழ்வின் நினைவாக **"இந்திய கலையின் பெருமை"** என்று தலைப்பிடப்பட்ட கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- வங்கதேசத்தின் புகழ்பெற்ற கலைஞர்களின் **75 கலைப் படைப்புகளைக்** காட்சிப்படுத்தும் வகையில் இந்த கண்காட்சியை இந்திய உயர் ஆணையர் **பிரனய் வர்மா** திறந்து வைத்துள்ளார். மேலும் இது இரு நாடுகளின் **கலாச்சார பரிமாற்றத்தையும்** ஊக்குவிக்கிறது என்றும் இந்தியாவிற்கும் வங்கதேசத்திற்கும் இடையிலான **ஆழமான பிணைப்பை** உலகிற்கு இந்த கண்காட்சியானது எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

## மாநில செய்திகள்

**IFFCO நானோ யூரியா ஆலைக்கு மத்திய அமைச்சர் அடிக்கல் நாட்டியுள்ளார்.**

- மத்திய உள்துறை அமைச்சரான **அமித் ஷா** ஆகஸ்ட் 12 அன்று குஜராத்தின் **கட்ச் காந்திதாமில் தேசிய IFFCO நானோ யூரியா ஆலைக்கு** அடிக்கல் நாட்டியுள்ளார். இந்த நிகழ்வானது குஜராத்தில் **இரண்டு நாள்** பயணமாக அவர் மேற்கொள்ளும் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.
- புதிய பசுமைப் புரட்சியானது **உணவு உற்பத்தியில்** நாட்டை தன்னிறைவு அடைய உதவுதல் மற்றும் **விவசாயிகளுக்கு செழிப்பைக் கொண்டு வருதல்** ஆகிய முதன்மையான இலக்குகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆலையானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

**"நாளந்தா பௌத்தம்" குறித்த ஒரு நாள் தேசிய மாநாடானது தொடக்கம்.**

- **லடாக்கின்** துணைநிலை ஆளுநராக **பி டி மிஸ்ரா,** அதன் தலைநகரமான **லேயில்** உள்ள **மத்திய புத்த ஆய்வக நிறுவனத்தில்** "நாளந்தா பௌத்தம்" வகை குறித்த **ஒரு நாள் தேசிய மாநாட்டை** முறையாக ஆகஸ்ட் 2023 இல் தொடங்கி வைத்துள்ளார்.
- **அனைத்து லடாக் கோன்பா அமைப்பு** மற்றும் **லடாக் பௌத்த சங்கம்** ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் **நாளந்தா பௌத்த பாரம்பரியத்தின் இந்திய இமயமலை பிரிவானது** இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. நாளந்தா பௌத்தத்தின் அடிச்சுவடுகளில் **மூல ஆதாரத்தை** மீட்டெடுப்பதையும் நாளந்தா பௌத்தத்திற்கான சவால்கள் குறித்து விவாதிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகும்.

**நாட்டின் முதல் வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பானது ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

- **தெலங்கானா** மாநிலத்தின் தொழில்துறை அமைச்சரான **கே ராமராவ்,** இந்தியாவின் முதல் வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பு(ADMF) மற்றும் வேளாண் தரவு பரிமாற்ற கட்டமைப்பானது(ADeX) அம்மாநில தலைநகரமான **ஹைதராபாத்தில்** ஆகஸ்ட் 2023 இல் தொடங்கி வைத்துள்ளார்.
- **ADeX** மற்றும் **ADMF** ஆகியவை மத்திய விவசாயத் துறைக்கான **டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பாக(DPI)** உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இவை **மாநில அரசு-உலகப் பொருளாதார மன்றம்-இந்திய அறிவியல் கழகம்** ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- **அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள்** மற்றும் **தனியார் நிறுவனங்கள்** போன்ற விவசாயத் தரவு வழங்குநர்களிடையே பாதுகாப்பான மற்றும் தரநிலை அடிப்படையிலான தரவு பரிமாற்ற மேலாண்மையை எளிதாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த அமைப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**BAI அமைப்பானது குவஹாத்தியில் ஒரு தேசிய சிறப்பு மையத்தை தொடங்கியுள்ளது.**

- நாட்டின் மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தின் பூப்பந்து விளையாட்டு வளர்ச்சிக்கு ஒரு பெரிய ஊக்கமாக, இந்திய பூப்பந்து(Badminton) அமைப்பானது(BAI) **ஆகஸ்ட் 11 அன்று அசாமின் குவஹாத்தியில்** ஒரு **"அதிநவீன தேசிய சிறப்பு மையத்தை"** திறந்து வைத்துள்ளது.
- இந்த மையமானது **சர்வதேச தரம்** வாய்ந்த வசதிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாகும். கூடுதலாக, இந்த மையம் **நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடனும்** வீரர்களுக்கான **60 படுக்கைகள்** மற்றும் **2,000** சதுர அடியில் பிரத்யேகமான **பிசியோதெரபி மையம்** உட்பட விளையாட்டு வீரர்கள் தங்கள் உச்சபட்ச செயல்திறனைத்

தக்கவைக்க மிகுந்த கவனிப்பையும் ஆதரவையும் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் இந்த மையமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என **BAI அமைப்பு** தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## நியமனங்கள்

**அன்அகாடமி நிறுவன மையங்களுக்கான தேசிய கல்வி இயக்குநராக அனுராக் திவாரி நியமனம்.**

- அன்அகாடமி கல்வி நிறுவன மையங்களின் நாடு முழுவதுமான **தேசிய கல்வி இயக்குநராக அனுராக் திவாரி** நியமிக்கப்பட்டுள்ளதாக கற்றல் இயங்குதளமான **அன்அகாடமி** தனது சமீபத்திய **ஆகஸ்ட் 11** அன்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இவர் இந்த நியமனத்திற்கு முன்பாக இந்தியாவின் மிகப்பெரிய கற்றல் இயங்குதளமான **ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ்** நிறுவனத்தில் நாடு முழுவதுமான **தேசிய கல்வி இயக்குநராக 13 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்** என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவர் இந்த நியமனத்தின் படி தனது சீரிய முயற்சிகளின் மூலம் இந்த **கற்றல் இயங்குதளத்தை** மேலும் மேம்படுத்துவார் என எதிர்ப்பார்க்கப்படுவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**ISH அமைப்பின் நிர்வாக இயக்குநராக குணால் வாசுதேவா நியமிக்கப்பட்டுள்ளார்.**

- சமையல் கலை மற்றும் விருந்தோம்பல் கல்வி நிறுவனமான இந்தியன் **ஸ்கூல் ஆஃப் ஹாஸ்பிடாலிட்டி(ISH),** அதன் நிர்வாக இயக்குநராக **குணால் வாசுதேவாவை** நியமித்துள்ளதாக தனது ஆகஸ்ட் மாத அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இவர் மேலும் **இணை நிறுவனர்** பதவிக்கும் உயர்த்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நியமனத்திற்கு முன்பாக இவர் அந்நிறுவனத்தின் **தலைமை இயக்க அதிகாரி** பணியை வகித்துள்ளார் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் **தலைமை நிர்வாக அதிகாரியான திலீப் பூரி,** தற்போது **"நிறுவன செயல் தலைவராக"** பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## புத்தக வெளியீடு

**செயற்கை நுண்ணறிவு நிபுணர் டா சச்சின் ஷர்மா, AI சம்பந்தப்பட்ட தனது புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.**

- செயற்கை நுண்ணறிவு ஆர்வலர் மற்றும் எழுத்தாளரான **டா சச்சின் ஷர்மா** தனது AI சம்பத்தப்பட்ட **"Prompt DOT AI: Mastering the Art of Creativity in the age of AI"** என்று தலைப்பிடப்பட்ட **புதிய புத்தகத்தை ஆகஸ்ட் 10 2023** அன்று வெளியிட்டுள்ளார்.
- மனித படைப்பாற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் அற்புதமான **தகவல்கள்** மற்றும் அதில் உள்ள **சிக்கல்கள்** குறித்து இந்த புத்தகமானது ஆராய்கிறது. மேலும் புதுமையான தொழில்நுட்பம் மூலம் எவ்வாறு தனிநபர்கள் மற்றும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை ஆக்கப்பூர்வ வெளியீடுகளை செழுமைப்படுத்த AI தூண்டுதல்களுக்கான வழிமுறைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த புத்தகமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

## விருதுகள்

**2023 ஆம் ஆண்டிற்கான தேசிய கோபால் ரத்னா விருதானது நாட்டின் தேசிய பால் தினத்தில் வழங்க திட்டம்.**

- **பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு அமைச்சகமானது,** 2023 ஆம் ஆண்டிற்கான **தேசிய கோபால் ரத்னா விருதுகளை** நாட்டின் **தேசிய பால் தினத்தில்** வழங்க திட்டமிட்டுள்ளதாக தனது **ஆகஸ்ட் மாத** அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த விருதுகளானது **RGM திட்டத்தின்** கீழ் பால் கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர்கள்(AITs) ஆகியோர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. உள்நாட்டு மாடு இனங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் **ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் (RGM),** இந்தியாவில் **2014 டிசம்பர் மாதம்** கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**2023 ஆம் ஆண்டிற்கான மைக்ரோசாப்ட் சூப்பர் ஸ்டார் விருதைப் CloudThat பெற்றுள்ளது.**

- பயிற்சி மற்றும் ஆலோசனை இணையதள தீர்வுகள் வழங்குனரான **பெங்களூருவை** சேர்ந்த **CloudThat நிறுவனமானது**, 2023 ஆம் ஆண்டிற்கான **"மைக்ரோசாப்ட் சூப்பர் ஸ்டார் விருதைப்"** பெற்றுள்ளதாக தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இது கடந்த **நான்கு ஆண்டுகளில்** இந்நிறுவனத்தின் தொடர்ச்சியாக **ஐந்தாவது விருது** என்பது குறிப்பிடத்தக்கதாகும். திறமை மற்றும் முன்மாதிரியான பல்வேறு மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களை வழங்குவதில் **CloudThat's நிறுவனத்தின்** விதிவிலக்கான அர்ப்பணிப்புக்கு இந்த விருது மற்றொரு சான்றாகும்.

**ஒலிம்பிக் நடுவர் வியாஸுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.**

- முன்னாள் **இந்திய நீச்சல் வீரரும்** இந்திய நீச்சல் அணியின் **தற்போதைய பயிற்சியாளரும்** மற்றும் **சர்வதேச நீச்சல் போட்டிகளில் நடுவருமான வியாஸ்(மயூர் வியாஸ்),** ஆகஸ்ட் 2023 இல் **ஜூஹூவில்** நடைபெற்ற **சர்வதேச குளோரி விருது** வழங்கும் விழாவில் **வாழ்நாள் சாதனையாளர் விருதானது** வழங்கப்பட்டுள்ளது.

- இந்த விருதை இவருக்கு பாலிவுட் நடிகையான **கங்கனா ரனாவத்** வழங்கி கௌரவித்தார். மேலும் இவரின் முக்கிய முன்னெடுப்பு முயற்சிகளின் மூலம் இந்திய நீச்சல் அணியின் திறமையை உலகறிய செய்ததற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளதாகும்.

## முக்கிய தினம்

**உலக உறுப்பு தான தினம் 2023**

- மனித உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை உலக பொது மக்களுக்கு ஏற்படுத்தவும், உடல் உறுப்பு தானம் குறித்த தவறான புரிதல் கருத்துக்களை மக்களுக்கு உணர்த்தவும் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 13ஆம்** நாளானது **உலக உறுப்பு தான தினமாக** கடைப்பிடிக்கப்படுகிறது.
- **Step up to volunteer; need more organ donors to fill the lacunae** என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். மேலும் இது உடலுறுப்பு தானத்திற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்த உலக மற்றும் உள்ளூர் பொதுமக்களுக்கான உலகளாவிய அழைப்பை மையமாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**சர்வதேச இடதுசாரி தினம் 2023**

- வலது கை பழக்கம் உள்ளவர்களால் ஆதிக்கம் செலுத்தும் இந்த உலகில் **இடது கை பழக்கம்** உள்ளவர்களை மதிக்கவும் அவர்களை வேறுபாடின்றி பழகவும், அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை உலகம் முழுவதும் உள்ள பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 13ஆம் நாளானது "சர்வதேச இடதுசாரி தினம்"** அல்லது **'சர்வதேச இடது கை பழக்கம் உடையோர் தினமாக'** கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த நாளானது முதன்முதலில் **1976 ஆம் ஆண்டு சர்வதேச சர்வதேச இடது கை பழக்கம் உடையோர் சங்கத்தின்** சார்பாக அதன் நிறுவனர் **டீன் ஆர். கேம்ப்பெல்** என்பவரால் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட **10 சதவீதம் பேர்** இடது கை பழக்கம் உடையவர்கள் என்றும், அதில் **ஆண்களே அதிகம்** என்று ஐ.நா தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.